# மாத்தளை பிரதேச சபை

# மாத்தளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஒக்தோபர் 08 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் மாத்தளை பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாத்தளை பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 152,500 தொகையான முத்திரைக் கட்டணம் ஆண்டின் வருமானத்தில் செலவு வைப்பதற்குப் பதிலாக திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) இரண்டாவது சனசமூக நீர்த்திட்டத்தில் கிடைத்திருந்த ரூபா 79,950 பெறுமதியான பஜாஜ் வகையைச் சேர்ந்த மோட்டார் சைக்கிளின் பெறுமதி மற்றும் இராணுத்தால் எடுத்துச் செல்லப்பட்டு மீளக் கையளிக்கப்பட்ட 53 – 4727 ஆம் இலக்க கப் வாகனத்தின் பெறுமதி என்பன கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 யூலை 25 ஆந் திகதிய மெய்மையாய்வு சபை அறிக்கையின் பிரகாரம் சபையில் பௌதீகரீதியாகக் காணப்படாத ரூபா 41,462 பெறுமதியான 03 குப்பை வண்டிகள் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

### (அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2012 மார்ச் 31 ஆந் திகதி வரையில் 03 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்காததுடன் அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பீடு செய்யக்கூடிய பெறுமதி ரூபா 9,274,011 ஆக இருந்தது.

### (ஆ) கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 449,832 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,572,165 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,083,182 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாதிருந்த வெளிநாட்டுப் பிரயாண முற்பணம் ரூபா 327,367 தொகையான மீதியில் 2008 இற்கு முன்பிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 310,367 தொகையான மீதிகளையும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 99 விதிக்கு முரணாக மீளாய்வாண்டின் போது ரூபா 1,291,873 பெறுமதியான 61 உறுதிச்சீட்டுக்கள் உறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 371 (ஆ) பந்தியின் பிரகாரம் செயல் நிமித்த உப கட்டுநிதியாக ஒரு சந்தர்ப்பத்தில் செலுத்தமுடியுமான ஆகக்கூடிய எல்லை ரூபா 20,000 ஆக இருந்த போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது 04 சந்தர்ப்பங்களில் ரூபா 124,000 கூட்டுத்தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) நிதிப்பிரமாணம் 371(2)(இ) பந்தியின் பிரகாரம் வழங்கப்பட்ட முற்பணம் உரிய செயற்பாடு முடிவடைந்ததும் உடனடியாகத் தீர்க்க வேண்டியிருந்த போதிலும் 2005 தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரை 07 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 310,367 தொகையான முற்பணம் 2012 சனவரி 26 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 5,700,000 தொகையான 07 மூலதன செலவின விடயங்களில் எவ்வித செலவினமும் செய்யப்படாது மாற்றப்பட்டும் சேமிக்கப்பட்டும் இருந்தன.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 930 | 1,040 | 641 |
| (ii) | வாடகை | 3,681 | 177 | 16 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,085 | 2,185 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 26,836 | 30,217 | 9,227 |

**2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 2,062,431 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 2,421,315 |

**2.3.3 நீர்க் கட்டணம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ரூபா 4,743,752 தொகையான நிலுவை நீர்க்கட்டணம் மீதியினுள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டியிருந்த நிலுவை நீர்க்கட்டண மீதி ரூபா 2,576,987 ஆக இருந்தது.

### 2.3.4 ஆதனவரி மற்றும் ஏக்கர் வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1) (அ) பிரிவின் பிரகாரம் நிலுவை ஆதன வரி மற்றும் ஏக்கர் வரி என்பவற்றை துரிதமாக அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த ஆதனவரி மற்றும் ஏக்கர் வரி மீதிகள் முறையே ரூபா 468,538 மற்றும் ரூபா 172,680 ஆக இருந்தது.

### 2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடையதாகக் காணப்பட்ட ரூபா 774,590 பெறுமதியான 17 பௌதீக வள விடயங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டன.

### 2.5 போதிய அதிகார பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள்அதிகாரச் சட்டத்தின் 19 (1)(1) ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படாமல் 32 ஊழியர்கள் நாட்கூலி அடிப்படையில் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் சனவரி தொடக்கம் திசெம்பர் வரை சம்பளமாக ரூபா 3,956,078 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தன.

### 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4 மற்றும் 6.3 ஆம் பிரிவுகள் மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக்கோவையின் 207 மற்றும் 208 ஆம் விதிகளுக்கு முரணாக பொதுப்போட்டியாளர் அடிப்படை பின்பற்றப்படாமல் நேரடியாகக் கூறு விலைகள் பெறப்பட்டு மீளாய்வாண்டின் போது 12 சந்தர்ப்பங்களில் ரூபா 1,498,204 தொகையான கொள்வனவுகள் மற்றும் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக்கோவையின் 114 ஆவது விதியின் ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் பழுது பார்த்தலுக்குரிய வேலைப்பகுதிகள் எதுவும் நிறைவேற்றப்படாதிருந்தும் ஜே.சீ.பீ இயந்திரத்தின் பழுதபார்த்தலுக்காக 75% முற்பணமாக ரூபா 102,946 தொகை மீளாய்வாண்டின் போது தனியார் கம்பனியொன்றிற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மத்திய மாகாண சபை பிரதம செயலாளரின் 2002 யூலை 05 ஆந் திகதிய சீபீசீ/சீஎஸ்/9/4/1/6/55 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் வாகனத்தின் பழுதுபார்த்தல் திருப்திகரமானதாக மேற்கொள்ளப்பட்டமை உரிய எந்திரப் பொறியியலாளரின் அறிக்கை பெறப்படாமல் மீளாய்வாண்டில் இரண்டு சந்தர்ப்பங்களின் போது ரூபா 210,567 தொகை வாகன பழுதுபார்த்தலுக்காகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் பழுதுபார்த்தலின் போது கழற்றி அகற்றப்பட்ட சகல உதிரிப்பாகங்கள் மற்றும் அகற்றப்பட்ட டயர் என்பன களஞ்சியத்துக்கு கையளிக்கப்பட்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாதிருந்த போதும் வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் டயர் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டில் 04 சந்தர்ப்பங்களில் ரூபா 577,367 தொகை செலவிடப்பட்டிருந்தன.

## 2.7 ஒப்பந்த நிர்வாகம்

ரூபா 6,233,559 தொகையான மதிப்பீட்டின் பிரகாரம் 2010 யூலை 10 ஆம் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்ட வில்லிவெல தகனக்கூட நிர்மாண செயற்பாடுகள் 2011 சனவரி 12 ஆந் திகதியில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய நிதி ஏற்பாடுகள் கிடைக்காமையினால் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அத் திகதியில் செய்யப்பட்ட கிரயம் ரூபா 3,250,893 ஆக இருந்தது.

## 2.8 இணங்கானப்பட்ட நட்டங்களும் இழப்புக்களும்

2011 ஆம் ஆண்டின் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான பலாபத்தவல பொது நூலகத்தில் ரூபா 8,769 பெறுமதியான 75 நூலகப் புத்தகங்கள் மற்றும் பிரதேச சபை அலுவலகத்தில் பெறுமதி கணிப்பிடப்படாத பொருட் பதிவேட்டின் 288 பொருள் அலகுகள் என்பவற்றின் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டன.

## 2.9 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) 2001 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக மத்திய மாகாண சபை மற்றும் மாத்தளை பிரதேச செயலாளர் என்போருக்கு கிடைக்க வேண்டியிருந்த ரூபா 1,306,000 தொகையைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2004 அம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 724,643 தொகையான 59 கடன்கொடுத்தோர் மீதிகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் சேவையை விட்டுச் சென்ற 08 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 110,732 தொகையான நிலுவைக் கடன் மீதியினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

(ஈ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 21 ஆவது பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் நிர்மாணிக்கப்படுகின்ற கட்டிடங்களுக்காக இணக்கச் சான்றிதழ் பெறப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட 308 அடையாள அட்டைகளில் 05 இற்காகவும், முன்னைய ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட 232 அடையாள அட்டைகளில் 06 இற்காகவும் மாத்திரம் இணக்கச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய விண்ணப்பங்கள் தொடர்பாக பின் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான நிருவாகம்

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஈ) இருப்புக் கட்டுப்பாடு